<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

**<u>03.03.2026</u>**

OS. No. 67/2011

பக்கம் – 3

PW1 – ராமகிருஷ்ணன்

**<u>1ம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கூட்டுறவு சங்கத்தில் என்னுடைய தந்தையின் பெயரில் உள்ள ஆவணத்தை திரும்ப கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். இரண்டு மற்றும் மூன்று பிரதிவாதிகள் தாவா சொத்தை கூட்டுறவு சங்கத்தில் அடமானம் வைத்தார்கள். தாவா சொத்து இரண்டு மற்றும் மூன்று பிரதிவாதிகளின் சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மூலம் கடந்த 29 4 2003 அன்று இரண்டு மற்றும் மூன்றாவது பிரதிவாதிகள் ஒன்றாவது பிரதிவாதியிடம் தாவா சொத்தை அடமானம் வைத்தார்கள் என்றால் சரிதான். இரண்டு மற்றும் மூன்று பிரதிவாதிகள் கடன் தொகையை ஒழுங்காக செலுத்தாத காரணத்தினால் தான் அந்த அடமானத்தை ரத்து செய்யாமல் 1ம் பிரதிவாதி வைத்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய தந்தை ஒன்றாம் பிரதிவாதிக்கு 12.08.2009 மற்றும் 02.02.2010 அன்று இரண்டு அறிவிப்புகளை அனுப்பி உள்ளார் என்றார் சரிதான். என்னிடம் காட்டப்படும் 12.08.2009 தேதியிட்ட அறிவிப்பு என்னுடைய தந்தை அனுப்பியது தான் அது பி.வா.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காட்டப்படும் 02.02.2010 தேதியிட்ட அறிவிப்பு என்னுடைய தந்தை அனுப்பியது தான் அது பி.வா.சா.ஆ.2 ஆகும். இந்த இரண்டு கடிதங்களுக்கும் இரண்டு மற்றும் மூன்று பிரதிவாதிகள் என்னுடைய தந்தைக்கு ஆதரவாக சம்மதம் எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். முதல் பிரதிவாதி மத்திய ரிசர்வ் வங்கியின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு தான் தொழில் புரிந்த வருகின்றது என்றால் சரிதான். 2009 ஆம் ஆண்டு இரண்டாம் பிரதிவாதி பாபு என்னுடைய தந்தை மீது சென்னை மாநகர காவல் ஆணையரிடம் ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அதுபோல் அதே வருடத்தில் இரண்டாம் பிரதிவாதி குன்றத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் தாவா சொத்துக் குறித்து எந்த ஒரு ஆவணமும் பதிவு செய்யக்கூடாது என்று ஒரு தடை மனுவினை கொடுத்திருந்தார் என்றால் அது குறித்தும் எனக்கு தெரியாது. இரண்டு மற்றும் மூன்று பிரதிவாதிகள்தான்

ஒன்றாம் பிரதிவாதி வங்கியில் இருந்து தாவா சொத்தினை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளனர் என்ற காரணத்தினாலும் வாதியாகிய நாங்கள் இவ்வழக்கில் ஒரு வேண்டாத தரப்பினர் என்றும் தாவா சொத்து தொடர்பாக எந்த ஒரு பரிகாரமும் கோரும் பட்சத்தில் அது இரண்டு மற்றும் மூன்று பிரதிவாதிகள் தான் ஒன்றாம் பிரதிவாதியிடம் கோர வேண்டும். அதனால் முதல் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்